| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அறிவழகன் | அ.வ.எண். 152/2006 | 08.08.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

வாதிக்கு நான் அக்கா மகன் ஆவேன். எனது அம்மா 1ம் பிரதிவாதியுடன் சேர்த்து உடன் பிறந்தவர்கள் மொத்தம் 8 பேர் ஆவார்கள். எனது அம்மாவை தவிர மற்றவர்கள் அனைவரும் ஆண் குழந்தைகள் ஆவார்கள். இலால்குடியில் உள்ள நில உரிமையாளர்களுக்கு எனது தாத்தா தைலான் வாழைக்கன்று வாங்கி தருவதும், வயலில் வாழைக்கன்றை நட்டு தருவதும், வாழை சம்மந்தமான வேலைகளுக்கு ஆட்களை வைத்தும் வேலை செய்துவந்தார். வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பெரியசாமி என்பவரிடமிருந்து 1941 ல் கிரையம் பெற்றார். வழக்கு சொத்து வாங்குவதற்கு யாரிடமிருந்து தைலான் பணம் பெற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தனது சொந்த உழைப்பைக்கொண்டு கிரையம் பெற்றதாக எனது அம்மா சொல்லி எனக்கு தெரியும். 1941ல் எனது தாத்தா தைலானுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்றும், அவரது வாரிசுகளான 8 பேரின் வருவமானத்தை கொண்டு தான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. 2000, 2001 ல் எனது தாத்தா தைலானுக்கு உடலக்குறைவு ஏற்பட்டு எங்களது வீட்டில் வைத்து பராமரித்து வந்தோம் என்று சொல்வது பொய் என்றும், வாதி தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 16.08.2024 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.